முருகப்பெருமான் துணை

# ஆறுமுக அரங்கமகானின் குருவார அருளாசி நூல்

12.09.2024

1. வள்ளலின் முகமாக என் படைகள்
வையகமெங்கிலும் நிரம்பி வந்திட
சொல்லவே கலியுகமா இதுவென
செப்பிடுவேன் வானவர்கள் வியந்திட

2. வியந்திட மாற்றம் கண்டிடும் காலம்
விரைந்து நடந்திட இருக்க
தயங்காது சன்மார்க்க படைகளே
தவசி என் ஜீவதடம் வாரீரென

3. வாரீரென அழைத்து அரங்கனும்
வழங்கிடுவேன் குரோதி வேங்கை திங்கள்
வாரமாம் சதுர் குருவார அருளாசிதனை
வழங்குவேன் உலகோர் நன்மை கண்டிட

4. கண்டிட முழுமதி விழா காலமெல்லாம்
கட்டாயம் உலகோர் என் தடம்
தொண்டுக்கு வந்தால் போதும்
தொடரும் வினையை வென்று மீள்வர்

5. மீள்வர் தன் பிறவிக் கடன் யாதென
மேலான அறிவுத் தெளிவுற
ஆள்வர் தன் ஆன்ம பலத்தை
அடைந்து கலியினில் கடைத்தேற

6. கடைத்தேற அரங்கன் அருள்வழியே
கண்கண்ட ஞானவழியே என உணர்ந்து
தடையற சித்திகள் அடைவதற்கு
தருமமே சிறந்த வழியென கண்டு

7. கண்டுமே அன்னதான சேவையில்
கட்டாயம் பங்களிப்பாக மாற்றி
தொண்டுடன் என் வழி வருகை
தொடரவே ஞானவான்களாவர்

8. ஆகவே அற்புதம் பிரணவக்குடிலில்
அரங்கன் என்னுள் வேலவன்
செகத்துக்கே நடத்தி வருக
செப்பிடுவேன் அரங்கனென் வாசல் வருக

9. வருகவே தசவாசல் திறவு
வையகத்தில் அவரவரும் தரும பலத்தால்
முருகா அரங்கா எனும் செபதபத்தால்
முழுமதி பூசை தொடர்பு பலத்தால்

10. பலத்தால் தானாக சித்தியாகி
பழுதின்றி அவரவரும் தேறுவர்
வளமுற வாழ்க்கையில் நலம்பெற
வருவோரும் அவர்கள் குடியோரும் தேறி

11. தேறியே தேசிகன் அவதார
தெய்வநிலை ஜீவமுக்தி நிலை
கூறிட பிறவா பெருநிலை
குறையிலா உலகோர் கண்டடைவர்

அரங்கமகானின் குருவார அருளாசி முற்றே.

–சுபம்–